# இரண்டாவது சர்வகட்சி மாநாடு 14-ந் திகதி நடைபெறும்

registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

EELANADU


National Tamil Daily

தபால்பெட்டி எண் : 49
போன்: 389

மலர் 11
இதழ்: 115
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 24 ரபி;அவ் 20 வெள்ளிக்கிழமை [6-6-69]

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்


போன்: 7199
தந்தி: வைரம்
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

## ஈழத் தமிழ் இளைஞர் இயக்கம் கூட்டுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழினத்தை எதிர்நோக்கும் அவசிய பிரச்னைகள் பற்றி ஆராய இரண்டாவது சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுகின்றார்கள் ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தினர்

இத்தச் சர்வகட்சி மாநாடு இம் மாதம் 14ம் திகதி காலை 10 மணிக்கு யாழ் மாநகர சபை செயற்குழு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. சகல கட்சித்தலைவர்கள் பிரமுகர்கள் உட்பட சகலருக்கும் இதற்கான அழைப்பு அனுப்பப்படுகின்றது.

சிறுபான்மைத் தமிழரும் தாய்மொழிக் கல்வியும் தீண்டாமையை ஒழித்து தேசிய அடிப்படையில் சகல தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் ஒருமைப்பாட்டை உண்டாக்குவது, தமிழ்ப்பகுதிக்கு ஒரு பல்கழக்கழகம் ஆகிய விடயங்கள் பற்றி இங்கு ஆராயப்படும்.

இக்கூட்டத்தில் பெற்றோர் சங்கத் தலைவர் திரு கு. நேசையா முக்கியமாகச் சொற்பொழிவாற்றுவசர்.

இம் மகாநாட்டை கட்சி சார்பற்ற இளைஞர் இயக்கம் கூட்டுவதால் சகல அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டுகமென்று அழைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'நாம் உரிமை பெறும்வரை தமிழர் எழுச்சி தினம் தொடரவேண்டும்'

## ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்து சாவகச்சேரி எம். பி. உரை

மட்டுவில், வெள்ளி

இலங்கையின் சரித்திரத்தில் முதன்முதலாகத் தமிழ்த் தலைவர்கள் அரசியற் கைதிகளாக்கப்பட்டுத் தடுப்புக் காவலில வைக்கபட்ட நாள் 1958ம் வருடம் ஆனி 5-ம் திகதி இந்தநாள் ஒப்பற்ற புனித நாள். தமிழ் மக்களின் உள்ளத்தைவிட்டு எடுபடாத உரிமை நாள். உரிமைப் போராட்டத்தின் ஆரம்பநாள். நாமும் இந்த நாட்டு மக்கள், எமக்கும் இந்நாட்டில் வாழ உரிமை உண்டு என்று ஆளும்கட்சியினருக்கு அறைகூவிய வீர நாள். தனிச் சிங்கள மசோதா ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது தமிழரசுத் தந்தை செல்வா அதை எதிர்த்துஇயக்கத்தை ஆரம்பித்து வைத்த நாளும் இன்னாள்தான் ... யில் நேற்று தமிழ் எழுச்சி தினத்தைமுன்னிட்டு நடந்த ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்து பேசுகையில் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி வாலிபமுன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எழுச்சி தினத்தையொட்டிய ஊர்வலம் சுமார் இரண்டு மைல்நீளம் நடைபெற்றது. ஒரு அணி திரு. நவரத்தினம் தலைமையிலும் மற்ற அணி திரு. எம் ஆலாலசுந்தரம் தலைமையிலுமான கூட்டம் ... கச்சேரி ... தை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் ...

## முத்தையன் கட்டு மக்கள் கஷ்டம்

நல்லூர், வியாழன்

ஒட்டுசுட்டானிலுள்ளமுத்தையன்கட்டு குடியேற்றத் திட்ட மக்கள் இம்முறை மழைபெய்யாததால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

உப உணவுப் பயிர்ச் செய்கை இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகமிளகாய், வெங்காயம் ஆகியனவே பெரிதும் பாதிக்கப்பட்ட உபஉணவுப் பயிர்களாகும். இம்முறை விளைச்சலில்லாததால் இப்பகுதி மக்கள் உணவுக்கே பெரும் கஷ்டப்படுகின்றனர். பல குடியேற்ற வாசிகள் வேறிடங்களுக்கு வேலை தேடிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்பகுதியில் போக்கு வரத்து மிகவும் மோசமாக இருக்கிறது. இதுபற்றி பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துக் கூறியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டானிலிருந்து முத்தையன்கட்டுக்கு பஸ் போக்குவரத்து சேவைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் இதுவரை இப்பகுதியில் எதுவித பஸ்சேவையும் நடைபெறாததால் மக்கள் சுமார் 4 மைல் தூரம் நடந்தே தமது தேவைகளுக்கு ஒட்டுசுட்டானை அடையவேண்டியிருக்கிறது. இதனால் இவர்களது நேரம் வீணாக்கப்படுவதோடு வீண்சிரமங்களுக்கும் உள்ளாகிறார்கள்.

## தேசீய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இழுக்கப்பட்ட தேசியலொத்தர்சபையின் 249-வது சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
25 K 0258 ரூபா 88,730

இரண்டாவது பரிசு
40 O 0238 ரூபா 35,492

மூன்றாவது பரிசு
37 Y 0626 ரூபா 8,873

தலா ரூபா 443-65 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

## ஆர்ஜண்டீனா மந்திரிசபை ராஜினாமா

புவனஸ் அயர்ஸ், ஜூன் 5

ஆர்ஜன்டீனா மந்திரிசபை ராஜினாமா செய்திருக்கின்றது. ஆர்ஜன்டீனாவின் அதிபர் ஒங்கனியாவின் உத்தரவின்படி மந்திரிகள் ராஜினாமா செய்ததாகத் தெரிகின்றது.

ஆர்ஜன்டீனாவில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களின்போது சுமார் 14 பேர் கொல்லப்பட்டனர். கலவரக்காரர்கள் அணிவகுத்து புரட்சித் தலைவர் அதிபர் ஒங்கானியாவின் மாளிகையை நோக்கிச் சென்றார்கள். அரசாங்கத்துருப்புகளுக்கும் கலகக்காரர்களுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் சுமார் 14 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர்வரையில் காயமடைந்தனர். தொழிலாளர் வேலைநிறுத்தமொன்றுக்கு ஏற்பாடு செய்ததாகக் கூறப்படும் 5 தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தச் சம்பவத்தினைத் தொடர்ந்து மந்திரிசபையில் மாற்றங்கள் செய்யும்பொருட்டு இப்பொழுது அதிபர் மந்திரிசபை ராஜிநாமாவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

## மலேரியா தடுப்பதற்கு நிபுணர் கூறும் ஆலோசனை

அளவெட்டி, வியாழன்

வலி-வடக்கில் மலேரியா ...

### பரீட்சை கட்டாயம் எடுக்கவேண்டும்

## ஈழநாடு விழா நாளைய கரப்பந்தாட்ட மோதல்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேநடாத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பமாகின்றது 'ஓவர் கேம்' போட்டியில் 28 கழகங்களும் 'செட்அப்' கேம் போட்டியில் 9 கழகங்களுமாகமொத்தம் 37 கழகங்கள் இப் போட்டியில் மோதுகின்றன.

சகல போட்டிகளும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெறும்.

மாலை 5-30க்குப்பின் நடைபெறும் போட்டிகள் யாவும் மின்ஒளி வெளிச்சத்தில் நடைபெறும்.

போட்டியில் பங்கு கொள்ளும் கோஷ்டிகள் யாவும் விதிகளுக்கமைந்தகரபந்துகள் கொண்டுவரல் வேண்மென்றும் போட்டிகள் எதுவித காரணங்கள் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாது எனவும்சகலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கல்லூரியில் நாளை நடைபெறும் முதல் போட்டி விபரங்கள்:

3-30 மணி: சூசையப்பர் கழகமும் சென் பீற்றர்ஸ் 'பி' பிரிவும் மோதும்.

4-30 மணி: திருநெல்வேலி சிவன் கோஷ்டியும் கிறீன்பீல்ட் கழகமும் மோதும்.

5-30 மணி: சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் நீர்வேலி விளையாட்டுக் கழக 'பி' பிரிவும்மோதும்.

6-30மணி: நீர்வேலி விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவும் யாழ் மறியற்சாலையும் மோதும்.

முழு விபரங்களும் நாளை வெளிவரும். (கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்படுகின்றனர். பல குடியேற்ற வாசிகள் வேறிடங்களுக்கு வேலை தேடிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்பகுதியில் போக்கு வரத்து மிகவும் மோசமாக தூரம் நடந்தே தமது தேவைகளுக்கு ஓட்டுகட்டானை அடையவேண்டியிருக்கிறது. இதனால் இவர்களது நேரம் வீணாக்கப்படுவதோடு வீண்சிரமங்களுக்கும் உள்ளாகிறார்கள்.

# தாய்மொழியே போதனா மொழியாகஇருக்கவேண்டும்

## வட்டுக்கோட்டை எம். பி. வலியுறுத்துகிறார்

அராலி, வியாழன்

ஒரு பிள்ளையின் போதனா மொழி அப்பிள்ளையின் தாய்மொழியாகவே இருத்தல் வேண்டுமெனக் கல்விமான்கள் எல்லோரும் ஏகமனதாகக் கூறி வரும் இந்நாட்களில் ஒருசிலர் அரசாங்க அலுவலக மொழி மூலம் தமிழ் பிள்ளைகள் கல்வி கற்பதனால் தான் முன்னேற்ற மடைவார்களெனக் கூறிவருகிறார்கள். இதனை நாம் ஏற்போமானால் நம் பிள்ளைகளின் கல்வி மிகவும் பாதிக்கப்படும். போதனா மொழி மாற்றத்தை நாம் தீவிரமாக எதிர்க்கவேண்டும்'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் அராலி தெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்க ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பெரிய பாடசாலைகளில் தான் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கற்பிக்கப்படுகிறதென்ற தப்பெண்ணம் நம்மிடையே நிலவி வருகிறது. இதனால்தான் சில பாட

(4- பக்கம் பார்க்க)

## இலவச சிகிச்சை

கொக்குவில், வியாழன்

பிரபல கண் வைத்தியர் டாக்டர் எஸ். ஆனந்தராஜன் சென்ற 3-ம் திகதி கொக்குவிலில் 100 கண் நோயாளர்களுக்கு இலவசச் சிகிச்சை யளித்தார். இவரிடம் சிகிச்சைபெற யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து மக்கள் வந்திருந்தார்கள். இதற்கான ஏற்பாட்டை மத்திய கொக்குவில் மாதர் சங்கம் செய்திருந்தது.

உண்டு என்று ஆளும்கட்சியினருக்கு அறைகூவிய வீர நாள். தனிச் சிங்கள மசோதா ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது தமிழரசுத் தந்தை செல்வா அதை எதிர்த்துஇயக்கத்தை ஆரம்பித்து வைத்த நாளும் இந்தநாள்தான். இதனை நாம் உரிமை பெறும் வரை தொடரவேண்டும். வாலிபர்கள் இதில் முக்கிய பங்கு கொள்ளவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் கைதடிச் சந்தி மைல்நீளம் நடைபெற்றது. ஒரு அணி திரு. நவரத்தினம் தலைமையிலும் மற்ற அணி திரு. எம் ஆலாலசுந்தரம் தலைமையிலுமான கூட்டம் நடைபெற்ற சாவகச்சேரி சந்தை மைதானத்தை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் ட்ருக்டர்கள் மோட்டார் கார்கள் மற்றும் வாகனங்கள் சைக்கிள்கள் ஆகியன கலந்துகொண்டன. கிராமிய வாத்தியகோஷ்டியுடன் ஊர்வலம் நடைபெற்றது.

**சுன்னாகம் மயான கருகிய சடலம்**

# நான்காவது நபர் விசாரணை

## வயோதிப மாதுவின் மகன்எங்கே?

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் மயானத்தில் கருகிய நிலையில் கிடந்த சடலத்தின் மரணம் சம்பந்தமாக நான்காவது நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

ஏற்கெனவே கைதான 70 வயது வயோதிபமாது உட்பட மூன்றுபேரும் விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பிலிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நான்காவதாக விசாரணை செய்யப்பட்டு வரும் சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கனகன் என்பவரை சுன்னாகம் பொலிசார் நேற்று முன்தினம் நள்ளிரவு கடைசியாகக் கிடைத்த ஒரு தகவலின் பேரில் கைது செய்தனா.

மூன்றாவதாக விசாரணை செய்யப்பட்ட வயோதிப மாதுவின் மகன் என்று கூறப்படும் ஒருவரை பொலிசார் இப்போது தேடிவருகின்றனர். மரணமானவர் மண்டைதீவைச் சேர்ந்த கே. ஸ்ரீகாந்தாவாக இருக்கலாம் என்ற நம்பிக்கை பொலிசார் மத்தியில் வலுவடைந்து வருகின்றது.

இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டு 10 நாட்களாகியும் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படாததோடு குற்றவாளிகள் எவரும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. (கா. நி.)

25 K 0258 ரூபா 88,730

இரண்டாவது பரிசு

40 O 0238 ரூபா 35,492

மூன்றாவது பரிசு

37 Y 0626 ரூபா 8,873

தலா ரூபா 443-65 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 17 A 0728 | 14 A 0392 |
| 25 A 0593 | 19 A 0140 |
| 11 A 0656 | 23 A 0424 |
| 24 B 0484 | 40 B 0334 |
| 36 B 0432 | 16 B 0821 |
| 18 C 0281 | 06 C 0442 |
| 14 C 0674 | 13 C 0068 |
| 02 C 0717 | 02 C 0451 |
| 23 D 0271 | 35 D 0508 |
| 09 D 0554 | 31 D 0156 |
| 21 E 0046 | 06 E 0354 |
| 31 E 0227 | 35 E 0961 |
| 40 E 0444 | 21 E 0602 |
| 24 E 0205 | 06 F 0481 |
| 41 F 0439 | 39 F 0491 |
| 03 F 0297 | 16 G 0318 |
| 22 G 0964 | 01 H 0603 |
| 10 H 0516 | 04 H 0684 |
| 14 H 0156 | 06 H 0833 |
| 20 H 0975 | 35 H 0530 |
| 23 H 0047 | 11 J 0629 |
| 11 J 0038 | 07 J 0216 |
| 03 J 0136 | 03 K 0082 |
| 06 K 0633 | 10 L 0922 |
| 26 L 0716 | 32 L 0577 |
| 03 M 0718 | 08 M 0296 |
| 08 M 0159 | 19 M 0037 |
| 37 N 0426 | 01 N 0470 |
| 11 N 0986 | 20 N 0554 |
| 06 O 0785 | |
| 28 O 0600 | 16 O 0834 |
| 10 P 0948 | 02 P 0388 |
| 24 P 0985 | |
| 35 P 0213 | 18 P 0855 |
| 13 P 0073 | 10 P 0897 |
| 20 P 0275 | 11 P 0834 |
| 13 P 0386 | 11 Q 0419 |
| 22 R 0466 | 10 R 0846 |
| 31 S 0710 | 38 S 0336 |
| 11 T 0380 | 18 T 0463 |
| 24 T 0115 | 02 T 0722 |
| 13 T 0193 | |
| 24 T 0819 | 10 U 0018 |
| 17 V 0435 | 29 V 0242 |
| 38 V 0548 | 17 W 0718 |
| 24 W 0166 | 21 W 0835 |
| 35 W 0556 | 19 X 0381 |
| 12 X 0672 | 13 X 0146 |
| 15 X 0546 | 37 Y 0183 |
| 03 Y 0556 | 27 Y 0351 |
| 24 Y 0991 | 27 Z 0822 |
| 22 Z 0159 | |

(இவை யாவும்உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

# மலேரியா தடுப்பதற்கு நிபுணர் கூறும் ஆலோசனை

அளவெட்டி, வியாழன்

வலி-வடக்கில் மலேரியாவைத் தடுக்க ஐந்தாண்டுத் திட்டத்தை கையாளும்படி உலக சுகாதார ஸ்தாபன நிபுணர் யோசனை கூறியுள்ளார்.

வலி - வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்த உலக சுகாதார ஸ்தாபன நிபுணர் திரு. பட்டேல் மலேரியா தடுப்பியக்கத்தை பார்வையிட்டபின்பே மேற்கண்டவாறு கூறினார்.

வலி-வடக்கு சுகாதார பரிசோதகர்களான திரு. பத்மநாதனும், திரு. அந்தோனிப்பிள்ளையும் மலேரியாவைத் தடுக்கும் நோக்குடன் மலேரியா தடுக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வியக்கத்தின் சேவையைப் பார்வையிட வந்த உலக சுகாதார ஸ்தாபன நிபுணர் இங்கு மலேரியா தடுப்பியக்கம் சிறப்பாக நடைபெறுவதாகவும், ஐந்தாண்டு திட்டமொன்றை வகுத்தால்தான் மலேரியாவை இங்கிருந்து களையலாமென்றும் கூறினார்.

இலங்கை மலேரியா தடுப்பியக்கத் தலைவர் திரு. எஸ். சிவப்பிரகாசம், வலி வடக்கு சுகாதார பரிசோதகர் திரு. வி. கந்தையா ஆகியோர் இவரைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தனர்.

## கலைக்கண்காட்சி

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் இன்றும் நாளையும் விஞ்ஞானக்கலைக்கண்காட்சி நடைபெறவிருக்கின்றது. முதல்நாள் நிகழ்ச்சியை வடபகுதிகல்விஅதிபர் திரு. எஸ். தணிகாசலமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சியை திருமதி மங்கையர்க்கரசிஅமிர்தலிங்கமும் ஆரம்பித்துவைப்பார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பரீட்சை கட்டாயம் எடுக்கவேண்டும்

கோட்டை, வெள்ளி

நாடெங்கிலுமுள்ள சுமார் இரண்டு லட்சம் 7-ம் வகுப்பு மாணவர்கள் இன்றுநடைபெறும் ஜாதிகநவோதய பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கின்றனர்.

முதல் முறையாக இவ்வாண்டு நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கு சகல மாணவர்களும் கட்டாயம் தோற்றவேண்டுமென வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

## இன்று வள்ளுவர் விழா

மட்டுவில், வெள்ளி

மட்டுவில் தெற்கு இளைஞர் மின்னேற்றக்கழக ஆதரவில் இன்று மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவுவிழா கிழிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

வள்ளுவர் இலக்கிய வாதியா?, சமய வாதியா! என்னும் பொருள் பற்றிக் கருத்தரங்கம் ஒன்றும்இடம்பெறும்.

மட்டக்களப்பு எம்.பி. திரு செ. இராசதுரை, சாவகச்சேரி எம்.பி. நவரத்தினம் உட்படப்பலர் பேசுவர். கலை கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் பிரமஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா மாலை 6 மணிக்கு ''கம்பராமாயண விரிவுரை நிகழ்த்துவார்.

புங்குடுதீவு விநாயகர் ஆலய மகோற்ஷவத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் இரவு 9 மணியளவில் பத்துநாட்கள் தொடர்ந்து வண்ணை ஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்.

## பூர்த்தியாகவில்லை

கிண்ணியா. வியாழன்

கிண்ணியா மகாவித்தியாலயத்தின் பொதுமண்டபத்திற்கான ஒப்பந்த வேலைகள் 1962-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டும் இதுவரை இக்கட்டிடத்திற்கான வேலைகள் பூர்த்தியடையவில்லை

விளையாட்டுக் கழகமும் நீர்வேலி விளையாட்டுக் கழக 'பி' பிரிவும்மோதும்.

6-30மணி: நீர்வேலி விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவும் யாழ் மறியற்சாலையும் மோதும்.

முழு விபரங்களும் நாளை வெளிவரும். (கா. நி)

# ஈழநாடு விழா

## நேற்றைய உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நேற்றைய ஆட்ட முடிவுகள்:,

சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கிறீன்பீல்டுடன் மோதிய சென். மேரிஸ் 4-1 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாவது ஆட்டத்தில் கடற்படையுடன் மோதிய வல்வை யுனைட்டட் 3-2 கோல்களால் வெற்றியீட்டியது. கோட்டை மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் சென் ஜோசெப்புடன் மோதிய பாடும் மீன் கோஷ்டி 5-1 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாவது ஆட்டத்தில் சென் நிக்கிலஸுடன் மோதிய பொலிஸ் கோஷ்டி 3...1 கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி முழு விபரங்களும் நாளை ஈழநாட்டில் வெளிவரும். (கா. நி.)

# ஈழநாடு கலைவிழாவில் நாகேஷின் 'ருக்குகல்யாணம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்னிந்திய பிரபல நகைச்சுவை நடிகரான நாகேஷின் 'ருக்கு கலியாணம்' நகைச்சுவை நாடகத்தை கண்டுகளிக்க ஒரு அரிய சந்தர்ப்பம்! ஈழநாடுகலைவிழாவுக்குவாருங்கள்! முழு விபரங்களுக்கும் தொடர்ந்து ஈழநாடு வாசியுங்கள். (கா. நி)

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# "ஈழநாடு' மர்ம மனிதன்' இவர் தான்!

# 14-ம் திகதி உங்களுக்கு காட்சி தருகிறார்

## நூறு ரூபா யாருக்கு? கண்கள் காட்டிக் கொடுக்காதோ!

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

யாழ்ப்பாணம், வெள்ளி

நிமிடக்கணக்காக, நாள் கணக்காக, வாரக்கணக்காக நீங்கள் சந்திக்க வென்று ஏங்கித் துடித்துக் கொண்டிருக்கும் ஈழநாடு மர்மமனிதன் இவர்தான்!

ஈழநாடு மர்மமனிதன் இம்மாதம் 14-ம் திகதி காலை 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை உங்களுக்குக் காட்சிகொடுக்க முன்வந்துள்ளார்! அவரைக் கண்டு பிடித்து 100 ரூபாரொக்கப் பணத்தைப் பெறும் அதிர்ஷ்டசாலியாகுங்கள்!

மர்மமனிதன் எப்படி இருப்பார்? அவரைக் கண்டுபிடிக்க என்ன செய்ய வேண்டும்? இவை தானேகேள்விகள். இதோ வாசியுங்கள்!

இம்மாதம் 13ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் மர்மமனிதனின் கண்கள் இரண்டும் பிரசுரிக்கப் கப்படும். இந்த மர்ம மனிதனை அவரது கண்களைக் கொண்டு நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

உங்களது கண்பார்வைக் கூர்மையை அறியவே இது ஒரு போட்டி!

**இந்த மர்ம மனிதன் 14ம் திகதி காலை 8மணிக்கு ஈழநாடு காரியாலய வாசலிலிருந்து ஆரம்பமாகி நண்பகல் கோட்டை மைதானத்தில் முடியும் அலங்கார வர்த்தக, விவசாய விநோதஉடை ஊர்வலத்துடன் சென்று கொண்டிருப்பார்.**

இவரைக் கண்டு பிடிக்கும்போது நீங்கள் இம்மாதம் 14ம் திகதிய ஈழநாடு பத்திரிகையின் 5 பிரதிகளைக் கையில் வைத்திருக்க வேண்டும். 5 பிரதிகளைக் கையில் வைத்திருக்காவிட்டால் நீங்கள் 'ஈழநாடு' மர்மமனிதனைக் கண்டுபிடிக்க எவ்விதத்திலுமே அருகதையில்லாதவர்களாகிவிடுவீர்கள்.

13ம் திகதி பத்திரிகையில் பிரசுரமாகும் ஒரு ஜோடிக் கண்களைக் கொண்டு 14ம் திகதி ஊர்வலத்தில் மர்மமனிதனை முதலில் கண்டு பிடிப்பவரே 100 ரூபா பரிசுக்கு சொந்தக்காரராவர்.

ஈழநாடு ஊழியர்களோ, 'மர்ம மனிதன்' போட்டி அமைப்பாளர்களோ, அவர்களதுநெருங்கிய உறவினர்களோ இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. மர்மமனிதனைக் கண்டு பிடித்தவர், போட்டி முடிவடைந்த பின்னராலும் கூடமர்மமனிதனுடன்ஏற்கனவே எவ்விதத்திலாவது தொடர்பு கொண்டிருந்தவரென்றோ, அவரதுஉறவினர் என்றோகண்டுபிடிக்கப்பட்டால் பரிசுபெற அருகதையற்றவராகலாம்.

மர்மமனிதனைக் கண்டு பிடித்ததற்கான100 ரூபா பரிசும் 14ம் திகதி இரவு யாழ்திறந்தவெளியரங்கில் நடைபெறும் கலைவிழாவில் வழங்கப்படுவதோடு மர்ம மனிதனும் மேடையில் காட்சியளிப்பார்.

விபரங்களைத் தொடர்ந்து ஈழநாடில் வாசியுங்கள். (கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### தேவை

காஸ்-எலெக்றிக் வெல்டிங் மிஷின்களில் வேலைசெய்யக் கூடிய அனுபவமுள்ள, தொழிலாளர் தேவை. 10-6-69க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். பைனல் ரேணிங் வேக்ஸ் 103, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 1178

### கல்வி

ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள்சதம் ஐந்துடன் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பரீட்சைக்குரிய வகுப்புகள் ஆனி 11-ந் திகதி ஆரம்பிக்கப்படுகிறது. சிங்களம் காலை மாலை வகுப்புக்கள் (உத்தியோகஸ்தர்களுக்கு விசேட மாலை வகுப்புகள்) G. C. E. A / Lபௌதிக வகுப்பு ஆனி 11-ந் திகதி ஆரம்பமாகிறது. College of Education Opposite the old Bus Stand, Jaffna. 1177

6-ம் தர தகுதிகாண் பரீட்சைகள் - 2-ம் தவணை மாதிரி வினுவிடைகள் - ஆங்கிலம் ரூபா 1/- தொகையாக வாங்குவோருக்கு கழிவு உண்டு. யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1181

### அன்பு வெளியீடு

வழிகாட்டியை மட்டுமடக்கி ஆக்கப்பட்டதும்; உரிய விளக்கப்படங்கள் கொண்டதும், புதுமுறை வினுக்களடங்கியதும், ஆய.........

**ஆருந்தரப் புவியியல்**

எழுதியவர்: க. குணராஜா பி ஏ. (Hons)

மீள்பார்வை:

வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

விலை ரூ. 3-90 வி. பி. கவனிக்கப்படும்.

விற்பனையாளர்:

**அன்பு புத்தகசாலை**
27 D, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் வர்த்தக ஸ்தாபனத்திற்கு கணக்குஎழுதுவதிலும், ஆங்கிலத்தில் திறமையாக எழுதுவதிலும், தேர்ச்சி பெற்ற வாலிபர் தேவை. வயது: 20—25க்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சகல தராதரநற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ம. நடராசா, 6, 2-ம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 1186

கீழ்க்காணும் சங்கத்துக்கு முகாமையாளரும், விற்பனையாளரும் தேவை. முகாமையாளர் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். பிணைப்பணம்: ரொக்கம் ரூபா 1000 - உறுதிப் பிணை: 2000/-. சம்பளம் முறையே 120/-, 70/-. 25-6 69-க்குமுன் தலைவருக்கு விண்ணப்பிக்கவும்:- ஊர்காவற்றுறைமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை. 1185

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன்கோவிலுக் கண்மையில் காங்கேசன்துறை வீதி 330-ம் இலக்க ஒன்றரைப்பரப்புக்காணியில் அமைந்துள்ள நவீன வசதிகளையுடைய மாடிக் கட்டிடம் விற்பனைக்குண்டு. குடியிருப்பதற்கோ, காரியாலயத்திற்கோ, பண்டகசாலைக்கோ, அச்சகத்துக்கோ வேறு எதுவித வர்த்தக நிறுவனத்துக்கோ மிகப் பொருத்தமானது. விபரங்கட்கு: காரியதரிசி, அந்தியகால சகாயநிதிச் சங்கம் லிமிற்றெட், 330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1183

கொமர் டீசல் லொறி 22 சிறி 4307 விற்பனைக் குண்டு. நிர்வாகக்காரியதரிசி, தெ. யா. ப. நோ. கூ. ச. சமாசம், கிளிநொச்சி என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 1182

## உதவி லிகிதர்கள் தேவை

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன.

வயது: 25—40.

ரொக்கப்பிணை: ரூ. 100,-

சம்பளம்;-

55-00 90-00 சக / 10X3-50 படிகள்

முடிவு திகதி:- 16-6-69.

கடைசியாகச் சித்தியெய்திய கல்வித்தராதரப்பத்திரத்தின் பிரதியும் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

கரைச்சி வாசிகளுக்கு விசேஷ சலுகை உண்டு.

அ. சி. சுந்தரம்
தலைவர்.

தெ. யா. ப. நோ. கூ. ச. சமாசம்,
கிளிநொச்சி. 1594

### விற்பனைக்கு

கார்

EN தொடரில் நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனரும், போட் பிறிபெக்ற் காரும் உடன் விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: Dr. K. பாலசுப்பிரமணியம், 216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1175

அண்மையில் திருத்தி அமைக்கப்பட்ட நல்லநிலையிலுள்ள தொடர்ந்து ஒருவரினலே பாவிக்கப்பட்டதுமான பொக்வார்ட் 2-வது ஸ்ரீ இலக்கத் தொடர்புள்ள கார் ஒன்றுவிற்பனைக்குண்டு. வின்ஸ்லோஸ் அல்லது 221, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 1184

### திட்டம்

திருக்கோணமலை, வியா

திருக்கோணமலையில்நவீன நூல்நிலையமொன்றை நகராண்மைக்கழகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந் நூல்நிலையத்தை அமைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாவைக் கடனுகத் தரும்படிகழகம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 6—6—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-10 வாத்திய இசை, 7-30துதிப்பாடல்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒடிவிளையாடு பாப்பா 5-45 படத்திலிருந்து.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 வானெலிகுறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

### பரீட்சை

உடுவில், வியா.

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் சமய பாடப் பரீட்சைகள் வரும் அக்டோபரில் நடைபெறும் என தெரியவருகிறது. இப்பரீட்சையில் தோற்ற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை ஜூலை மாதம் 25-ம் திகதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணு சொற்பயிற்சி மன்றம்

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

OO பேச்சாளராக விரும்பினுல் விண்ணப்பியுங்கள். நிபந்தனைகளனுப்பப்படும்.
OO போயா தினங்களில் பயிற்சிகள் நடைபெறும்.
OO ஆண், பெண் அனைவரும் உறுப்பினராகலாம். குறிக்கப்பட்ட தொகையினர்மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பொறுப்பாளர்: **புதுமைலோலன்**

OOO விரைவில் ஆரம்பமாகும்.


A. 40
புதிய சிறந்த 5.25 x 16
டன்லப் ரயர்

★ ரயர் — ரீயூப்
★ fபான் பெல்ட்
★ பிஸ்ரன் றிங்ஸ்
★ பெயறிங்ஸ்
★ லொட்ஜ் ப்ளக்

வில் M. K. 12 றேசர்

**டன்லப் ஸ்ரோஸ்**

236, ஆஸ்பத்திரி வீதி, ... யாழ்ப்பாணம். 1587


'ஈழநாடு' நொக்கவுட் உதைபந்தாட்ட போட்டி

# சென். அன்ரனிஸ், மயிலிட்டி புளூஸ், யுத்கவுன்சில், கிரஸ்கொப்பர்ஸ் வென்றன

— நமது விளையாட்டு நிருபர் —

யாழ்ப்பாணம, வெள்ளி

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்படும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளின் விபரம் வருமாறு;

பாஷையூர் ''சென். அன்ரனிஸ்'' விளையாட்டுக்கழகத்துக்கும், ''வைக்கிங்ஸ்'' விளையாட்டுக்கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

### சென். அன்ரனிஸ் வெற்றி

இப்போட்டி ஆரம்பமாகி 8 நிமிடங்களின் பின் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் இடது முன்னணி வீரர் அன்ரனிப்பிள்ளை முதலாவது கோலைப் போட்டார். இதையடுத்து இக் கோஷ்டியின் முன்னிணி வீரர் ஜோஜ் இரண்டாவது கோலைப் போட்டார். இடைவேளையின் போது இக் கோஷ்டி 2-0 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் முன்னும், பின்னும் வைக்கிங்ஸ் கோஷ்டியினருக்கு மிக இலகுவாக கோல்கள் போடும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது இக் கோஷ்டியின் நிலை குலைந்த விளையாட்டினுல் இக்கோல்களைப் போடாது விட்டு விட்டனர். இடைவேளையின் பின்னும் சென். அன்ரனிஸ் கோஷ்டியினர் மேலும் இரு கோல்கள் போட்டனர். இக்கோல்களை இக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான சின்னமணி, யோசப் ஆகியோர் வேகமாகப் போட்டனர். ஆட்டங்கள் முடிவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும் போது சென். அன்ரனிஸ் கோஷ்டியின் முன்னணிவீரர் ஒருவர் எதிர்க்கோஷ்டியின் கோல் வாயிலை நோக்கி அடித்த பந்தை எதிர்க் கோஷ்டியின் பின்னணி வீரர் ஒருவர் தடுத்தபோது பந்து அவ்வீரரின் காலில் பட்டு அவர்களின் கோல் வாயினுள்ளே சென்றது. இதனுல் 'சென். அன்ரனிஸ்' கோஷ்டியினர் 'வைக்கிங்ஸ்' கோஷ்டியை ஆட்ட முடிவில் 5-0 கோல்களால் வெற்றிபெற்றது.

...ராகக் காணப்பட்டது. இப்போட்டியில் ஊர்காவற்றுறை ''சென். ஜேம்ஸ்'' விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன,

போட்டி ஆரம்பமாகி 10 நிமிடங்களின் பின் மயிலிட்டி புளூஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் சண்முகலிங்கம் மிக வேகமாக ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின்போது மயிலிட்டி புளூஸ் 1-0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடிய போதும், இரு கோஷ்டிகளும் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர். போட்டியின் முடிவில் மயிலிட்டி புளூஸ் விளையாட்டுக்கழகம் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தை 1 - 0 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு ஐத்துடுக்குலசிங்கி மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரு போட்டிகளின் விபரம் வருமாறு:

### யுத்கவுன்சில் வெற்றி

'குருநகர் யுனைட்டட்' விளையாட்டுக்கழகத்துக்கும், 'யுத்கவுன்சில் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கவர்ச்சியான போட்டியில் யுத்கவுன்சில் நாணயச் சுண்டல் அதிர்ஷ்டத்தால் வெற்றிபெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகியவுடன் யுத்கவுன்சில் கோஷ்டியின் முன்னணி வீரர் அலோசியஸ் மின்னல் வேகத்தில் ஒருகோலைப் போட்டார். இடைவேளை வரை எதிர் கோஷ்டியினர் கோல்கள் எதுவும் போடவில்லை. இடைவேளையின் பின் குருநகர் யுனைட்டட் மிக வேகமாக விளையாட

(4ம் பக்கம்பார்க்க)


**ராஜா** 144வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
**ரஞ்சனு தியேட்டர்**
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க**

**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
**பரிசு**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45P.M.
Rod Steiger, Lee Remmick
in
NO WAY TO TREAT A LADY
(Techni Color)
[Academy Award Winner

REGAL JAFFNA

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர் வரலக்ஷ்மி
நடித்த
**உயிரா மானமா**

இன்றுமுதல் ஆரம்பம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 3 காட்சிகள், போயா, பிரீபோயா 4 காட்சிகள்.
நாகேஷ்—சுந்தரராஜன்
வசந்தா—மனேரமா
நடித்த
**ஆலயம்**

கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது!
(ஜேம்ஸ்பொண்ட்) (ஆடலழகி)
**ஜெய்சங்கர் - ஜெயலலிதா**
நாகேஷ் - மனேரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து
வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

OO போயா தினங்களில் பயிற்சிகள் நடைபெறும்.
OO ஆண், பெண் அனைவரும் உறுப்பினராகலாம்.
குறிக்கப்பட்ட தொகையினர்மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
பொறுப்பாளர்: புதுமைலோலன்
OOO விரைவில் ஆரம்பமாகும்.


வில் M. K. 12 றேசர் ★ லொட்ஜ் ப்ளா

டன்லப் ஸ்ரோஸ்

236, ஆஸ்பத்திரி வீதி, ... யாழ்ப்பாணம். 1587


வீரர் ஒருவர் தடுத்தபோது பந்து அவ்வீரரின் காலில் பட்டு அவர்களின் கோல் வாயினுள்ளே சென்றது. இதனுல் 'சென். அன்ரனிஸ்' கோஷ்டியினர் 'வைக்கிங்ஸ்' கோஷ்டியை ஆட்ட முடிவில் 5-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தம்வகித்தார்.

**மயிலிட்டி**

**புளூஸ் வெற்றி**

இரண்டாவதாக நடைபெற்ற போட்டி மிகசிறப்


Rod Steiger, Lee Remmick
in
NO WAY TO TREAT A LADY
(Techni Color)
[Academy Award Winner

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
HUGH O' BRAIN
in
**Assassination in Rome**
(Cinemascope Color)

நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து

வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்

# பொம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ.
இசையமைப்பு வி. குமார்

யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய

# ஷெல் விவசாய இரசாயனப் பொருள்களுக்கும்

# குரூேமோ உரங்களுக்கும்

ஒரு பிரதான கையிருப்பாளர்களாக நாங்கள் நியமிக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகின்றேம்.

கிரமமாக எங்கள் வான் வண்டிகள் முழுவட்டாரத்திலும் நடமாடி எங்கள் ஆதரவாளர்களுக்குச் சுணக்கமில்லாததும் தாராள மனப்பான்மையுள்ளதுமான சேவையை உறுதிப்படுத்தும்

## ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன்ட் பிரதேர்ஸ்

162, 164, 166, ஆசுப்பத்திரி வீதி,
பெரியகடை — யாழ்ப்பாணம்.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

# யாழ். வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ எம். என். நம்பியார்
★ நாகேஷ்
★ சிவகுமார்
★ நாட்டியப் பேரொளி பத்மினி
★ கே. ஆர். விஜயா



★ சௌகார்ஜானகி ★ ராஜசுலோசனு ★ பேபி பத்மினி
மாஸ்டர் பிரபாகன் ★ மனேரமா

நடித்த

# திருமால் பெருமை

[முழுநீள ஈஸ்ட்மென்கலர்]

கதை—வசனம்—டைரக்ஷன்: A. P. நாகராஜன்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
இசையமைப்பாளர்: K. V. மகாதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபூல் புறப்படுவதற்கு முன்

# ஆந்திரா தலைநகருக்கு பிரதமர் இந்திரா திடீர் விஜயம்

## தெலிங்கானு கிளர்ச்சி பற்றி தலைவர்களுடன் ஆலோசனை

### ஊரடங்கு அமுலில் இருந்தும் குழப்பங்கள் குறையவில்லை

புதுடில்லி, ஜூன் 5

**பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி கடந்த இரவு மிக அவசரமாக விமானத்தில் ஹைதராபாத்துக்குப் பறந்துசென்று அங்குள்ள தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தினர்.**

**தெலிங்கானு கிளர்ச்சிகள் மிக உச்சநிலையை அடைந்திருப்பதாலும், ஹைதராபாத், செகந்தராபாத் ஆகிய இரு நகரங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாலும் பிரதமர் இந்திரா பெரிதும் கவலைகொண்டிருப்பதையே இந்தத்திடீர்ப் பிரயாணம் காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றார்கள்.**

பிரதமர் இந்திரா ஹைதராபாத்தில் சுமார் 5 மணிநேரம் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டு இன்று அதிகாலையில் புதுடில்லிக்குத் திரும்பினர். அவர் இன்று காலையில் ஆப்கானிஸ்தானில் 5 நாள் தங்குவதற்காகப் புறப்படவிருக்கின்றார்.

தனி தெலிங்கானுராஜ்யம் கோரி நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் வன்முறைச் சம்பவங்களாக வெடித்துள்ளதால் பொலிசாரும் ராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்படுத்த அழைக்கப்பட்டுள்ளனர். நேற்று பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் இறந்தவர்களின் தொகை 8 என்று அரசாங்க அறிவித்தல் ஒன்று கூறுகின்றது. 41 பேர் காயமடைந்துள்ளனர். 36 மணிநேர ஊரடங்கு சட்டம் நாளைக் காலையில் முடிவடைகின்றது.

ஊரடங்கு சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. 35 இடங்களில் தீவைப்புகள் நடைபெற்றுள்ளன. கடைகள் சூறையாடப்பட்டன. கட்டிடங்கள் தீக்கிரையாகின, மின்சார உபநிலையங்கள்

ஆந்திர முதல்வர் திரு. பிரம்மானந்த ரெட்டி, தெலிங்கானு பிரஜா சமிதி பாபுஜி, தெலிங்கானு காங்கிரஸ் கட்சித்தலைவர் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனசங் தலைவர்கள், மாணவர் சங்கத் தலைவர்கள் ஆகியோருடன் திருமதி காந்தி ஆலோசனைகள் நடத்தினர். அங்குள்ள நிலைமைபற்றியும் எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு திட்டம்பற்றியும் பிரதமர் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகின்றது.

அமைதியைப் பேணும்படியே அவர் அதிகம் வற்புறுத்தியதாகக் கூறப்படுகின்றது. அமைதியில்லையென்றால் வேறு எதுவும் செய்து கொள்ள இயலாது என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

தமது ஹைதராபாத் விஜயத்தில் குறிப்பிட்டநோக்கம் எதுவும் இருக்கவில்லையென்று பிரதமர் புதுடில்லியில் கூறினர்.

---

கல்கத்தாவில்

## மாணவர் குழப்பம்

கல்கத்தா, ஜூன் 5

நேற்று பொலிசார் கல்கத்தாவில் இருதடவைகள் கண்ணீர்ப் புகை வீசினர்கள்.

டிராம் வண்டியொன்றுக்கு ஆர்ப்பாட்ட மாணவர்கள் தீமூட்ட எத்தனித்தார்கள் தீயணைக்க வந்த படையினருக்கு கற்களால் எறிந்து தடுத்தார்கள்

இந்தச் சம்பவம் பற்றி ராஜ்ய அரசு விடுத்த ஓர் அறிக்கையில் காலித் தனங்கள் அனுமதிக்கப் படமாட்டாது என்றும் அவை கட்டுப்படுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## பாரதம் ஏவுகணை தயாரிக்கும்

---

## விமானம் மலையில் மோதி நொறுங்கியதில் 79 பேர்பலி

### பிரபல டெனிஸ் வீரரும் கொலை

மெக்ஸிகோசிட்டி, ஜூன் 5

மெக்ஸிக்கோவில் விமானமொன்று நொறுங்கி விழுந்ததில் அதில் இருந்த 79 பேரும் கொலையுண்டதாக அஞ்சப்படுகின்றது.

மெக்ஸிகோவின் வடபகுதியில் மலைச்சிகரமொன்றின் மீது இத்த விமானம் மோதிநொறுங்கியது விமானத்தின் நொருகியபகுதிகள் கிடக்குமிடத்துக்கும் மேலாகப் பறந்து பார்த்த செஞ்சிலுவைச்சங்க விமானங்கள் எவரும் உயிருடனிருக்கும் அறிகுறிகள் இருப்பதாகத் தெரியவில்லையென அறிவித்துள்ளன. இந்தவிமானத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்த மெக்ஸிக்கோவின் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரரான ராபைல் ஒசுனுவும் கொலையுண்டவர்களில் ஒருவர் என்று கருதப்படுகின்றது.

---

## 18 பேருக்கும் விடுதலை

### பியாப்ரா தலைவர் இணக்கம்

லிஸ்பன், ஜூன் 5

பியாப்ராவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 18 வெளிநாட்டு எண்ணெய்த் தொழிலாளர்களையும் விடுதலை செய்வதற்கு பியாப்ரா தலைவர் ஒஜுக்கு இணங்கியிருப்பதாக போர்த்துக்கல் தலைநகரில் அறிவிக்கப்பட்டது.

பெடரல் நைஜீரியத் துருப்புகளுடன் சேர்ந்து பியாப்ராவுக்கு எதிராக இவர்கள் சண்டையில் இறங்கியதாகப் பிடிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்களில்

---

## எல்லைக்காந்தி வருவார்

புதுடில்லி-ஜூன்-5

இவ்வருடம் அக்டோபரில் காந்தி நூற்றுண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் இந்தியாவுக்கு விஜயம் செய்யஒப்புக் கொண்டுள்ளார். திரு. ஜெயபிரகாஷ் நாராயண் 'கபார் சான் ஸர்ஹாதி காந்தி சாலிகர ஹ் சமிதி'' சார்பில் விடுத்துள்ள அழைப்பை ஏற்று எல்லைகாந்தி இவ் விழாவில் கலந்து கொள்வார்.

காந்தியின் பாதையைச் சிறிதும் பிறழாமல் எப்போதும் பின்பற்றி வரும் எல்லைக்காந்தி இந்தியாவில் தங்கியிருக்கும் போது ஜவஹர்லால் நேரு நினைவுப்பரிசையும் பெற்றுக்கொள்வார் இதேவேளையில் இவரது எண்பதாவது பிறந்தினத்தைச் கொண்டாடி இந்தியமக்கள் அவர்மேல் கொண்டுள்ள அன்பைத் தெரிவிக்குமுகமாக பணமுடிப்பு அன்பளிப்புச் செய்யவும் கபார்கான் சல்கிரிசமிதி தீர்மானித்துள்ளது.

---

## குருபூசை

கொக்குவில், வியாழன்

கொக்தவில் சனசமூகநிலையத்தினரால் நிலையத் தலைவர் திரு. க. த. இராசாதலைமையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் குருபூசை விழா கொண்டாடப்பட்டது.

0 0 0

கோப்பாய், வியாழன்

'மனிதன் மனிதனுக வாழமுற்படுவதே வாழ்க்கையின் உயர்ந்த நெறியாகும்' வள்ளுவப் பெருந்தகையின் அடிப்படைச் சிந்தனைகளை

---

## "மறவாதிருக்க வழி"

அளவெட்டி, வியாழன்

''நாவலரையும், நல்ல தமிழ்ப் பாவலரையும் நாம் மறந்ததற்கு காரணம் அவர்கள் சொல்லிவைத்த கருத்தினை நம் சமுதாயம் மறந்ததே. அதுபோல எதிர்கால சமுதாயம் வள்ளுவரை மறக்காமல் இருக்கவேண்டுமானுல் வள்ளுவன் கருத்தினை மறவாமல அக்கருத்துக்களை செயற்படுத்த வேண்டும்.''

இவ்வாறு வீமன் காமம் மகாவித்தியாலய சைவ இளைஞர் சங்க ஆதரவில் நிகழ்ந்த வள்ளுவர் 2000 ஆண்டுநிறைவு விழாவிலும் திருஞானசம்பந்தர் குருபூசையிலும் கலந்துரையாற்றிய திரு. மயிலை சிவசண்முகதாசன் கூறினர்.

செல்வன் மா. லோகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மயிலை சிவசண்முகதாசன் தொடர்ந்து பேசுகையில் ஒழுக்கம் உள்ள சமுதாயத்தில்தான் கல்வி சிறப்புற முடியும் என்றுர்.

நவாலியூர் திரு. நல்லையா பேசுகையில், சைவசமயவழிகாட்டிகளாக விளங்கியநால்வரில் திருஞானசம்பந்தர் முதன்மை வாய்ந்தவர் என்றுர்.

மன்றக் காரியதரிசி செல்வன் விபுலானந்த மூர்த்தி நன்றி கூறினர்.

---

## விசேஷ பயிற்சி

அளவெட்டி, வியாழன்

தெல்லிப்பளைப் பகுதியில் தொற்றுநோய் தடுப்பது பற்றி பிரசாரம் செய்வதற்கென சுகாதார தாதிகளுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படுகிறது.

தெல்லிப்பளை சுகாதார நிலைய சுகாதார போதனுசிரியர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இதன் படி 25 தாதிமார்களுக்கு தற்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

---

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

கூப்பன் புத்தக மொன்று கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன மனேஜர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

---

'ஈழநாடு'

## முதலெழுத்துப் போட்டி-(7)

சென்ற போட்டியில் 'யாழ்ப்பாணம் நாடக பிரியர் கழகம்' என்ற பெயரில் வரும் முதல் எழுத்துகளுக்கு வேருெரு பெயர் கொடுக்கும்படி கேட்டிருந்தோம். பின்வரும் விடைகள் முதலாம் இரண்டாம் பரிசுகளுக்கு போட்டிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டன.

### முதலாம் பரிசு

**'யாவருக்கும் நாமம் போட்டு பிழைப்பவர் கழகம்'**

எழுதியவர்: செ. நடராசா, ரப்பர் ஆராய்ச்சிக் கழகம், அகலவத்தை.

### இரண்டாம் பரிசு

**யாவரும் நாடும் பிச்சை சந்தை'**

எழுதியவர்: எஸ். நல்லப்பா, மே/பா என். சந்திரகாந்தன், குப்பிளான், சுன்னுகம்.

### பாராட்டுக்குரியவை

'யாசிக்கும் நாடோடிகளின் பித்தலாட்ட களியாட்டம்' (மு. நேசராசா, ஏழாலை தெற்கு) 'யாரையும் நாக்குவளிக்க பிந்தாத களிசறைகள்' (கே அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர்), 'யாவரும் நாடும் பிஞ்சுக் கன்னம்' (திருமதி ந. மார்க்கண்டு, ராணி வீதி நல்லூர்), 'யாவரும் நாடுவது பியரும் கள்ளும்' (பொ. சுந்தரலிங்கம் சினியர் லேன், கலட்டி), யாமறிந்த நாட்டிலுள்ள பித்தம் கலங்கியவர்கள்' (இ ரமணி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

### அடுத்த போட்டி

ஏழாவது போட்டிக்கு 'கொழும்பு கலியாண தரகர் சங்கம்' என்ற கற்பனைப் பெயரில் வரும் முதல் எழுத்துகளான கொ. க. த. ச.வுக்கு ஒரு சுவையான வேறு பெயர் இடுங்கள் பார்ப்போம்.

### நிபந்தனைகள்:

விடையைக் கீழ்க்காணப்படும் கூப்பனில் நிரப்பி, உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக அதில் எழுதி அனுப்புதல்வேண்டும். அனுப்பும் விலாசம் **முதலெழுத்துப் போட்டி (7) 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு விடையும் கூப்பனில் எழுதப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. விடைகள் 10-6-69க்குமுன் எமக்கு வந்து சேரவேண்டும். மிகச் சிறந்த விடைக்குப் பரிசுப் பணமாக ரூபா 10-ம், இரண்டாவதுக்கு ரூபா 5-ம் வழங்கப்படும் வெற்றிபெறுபவர்களின் பெயரும் விலாசமும் முதலெழுத்துப்போட்டி (7) வெளியாகும்போது தெரிவிக்கப்படும்.

'ஈழநாடு'

**முதலெழுத்துப் போட்டி-(7)**

விடை : ..................................................

..................................................

பெயர் : ..................................................

விலாசம் : ..................................................

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்றுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. 35 இடங்களில் தீவைப்புகள் நடைபெற்றுள்ளன. கடைகள் சூறையாடப்பட்டன. கட்டிடங்கள் தீக்கிரையாகின, மின்சார உபநிலையங்கள் கொளுத்தப்பட்டன. டெலிபோன் துண்டிக்கப்பட்டது, பொலிஸ் 12 தடவைகளுக்கு மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது.

### பிரதமர் திடீர் விஜயம்

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இன்றுகாலையில் ஆப்கானிஸ்தானுக்கு செல்லவிருந்த வேளையிலும் ஆந்திரப்பிரதேசத்தில் உருவாகியுள்ள நிலைமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கு இரவோடு இரவாக விமானத்தில் பறந்து சென்று பேச்சுக்கள் நடத்துனர். இன்னு அதிகாலை மூன்றுமணிவரையில் பேச்சுககள் நீடித்தன.

செய்து கொள்ள இயலாது என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

தமது ஹைதராபாத் விஜயத்தில் குறிப்பிட்டநோக்கம் எதுவும் இருக்கவில்லையென்று பிரதமர் புதுடில்லியில் கூறினர்.

### ஆப்கானிஸ்தான் பயணம்

பிரதமர் இந்திரா இன்று காலையில் ஆப்கானிஸ்தானில் ஐந்துநாள் தங்கும் பொருட்டு காபூலுக்குப் புறப்பட விருக்கின்றார். ஆப்கானிஸ்தானுக்கு பிரதமர் இந்திரா விஜயம் செய்யவிருப்பதை அந்தநாட்டு பத்திரிகைகள் பலவும் வரவேற்று கட்டுரைகளும் செய்திகளும் வெளியிட்டுள்ளன. இருநாடுகளுக்கு மிடையிலான பரஸ்பர விஜயங்கள், உறவுகள் பற்றியும் உலக விவகாரங்கள் பற்றியும் அவர் அங்குள்ள தலைவர்களுடன் கலந்து பேசுவார்.

கள் அனுமதிக்கப் படமாட்டாது என்றும் அவை கட்டுப்படுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பாரதம் ஏவுகணை தயாரிக்கும்

புதுடில்லி, ஜூன் 5

பலவகை ஏவு கணைகளைத் தயாரிப்பதற்கு பிரெஞ்சு அரசாங்க ஸ்தாபனமொன்றின் ஒத்துழைப்பைப் பாரதம் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் பூர்த்தியாகி விட்டதாகத் தெரிகிறது.

பிரெஞ்சு உதவியோடு பலவகை ஏவுகணைகளைத் தயாரிக்கவிருக்கும் புதிய இந்திய ஸ்தாபனம் முதலில் பிரிட்டிஷ் விமானப் படையின் கான்பொரா வெடிகுண்டு விமானங்களால் பயன் படுத்தப்படும் வானத்திலிருந்து தரைக்குப் பாயும் ஏவு கணைகளைத் தயாரிக்கக் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.


நாற்பது ஆண்டுகளில் உயர்ந்தது. மக்களின் மனங்கவர்

# "மில்க்வைற் தயாரிப்பு"

உறைகளும் பொன்—அவை அழி பொருளல்ல

இன்றே திரட்டுக! நாட்டுக பெரும் பொருள்!!

- மில்க்வைற் நீல சோப்
- மில்க்வைற் பார் சோப்
- மில்க்வைற் மெடிகேட்டட் சோப்
- மில்க்வைற் சலவைப்பவுடர்

## மேலுறைகளுக்கு விசேஷ பொருள்கள்!

**மில்க்வைற் நீலசோப்:**

சிக்கனமான சலவைக்கும், சிறந்த உழைப்புக்கும் மதிப்புள்ள தயாரிப்பு.

(1) 50 மில்க்வைற் நீல சோப் உறைகளுக்கு:-
ஒரு பொலித்தீன் பேக் அல்லது
ஒரு பலவர்ணப் படம் அல்லது சாக்குப் பை.

(2) மில்க்வைற் நீலசோப் உறைகள் 100-க்கு :-
ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

(3) 300-க்கு மேற்பட்ட உறைகளுக்கு:- அழகிய துவாய் 1

**மில்க்வைற் பார் சோப்:**

நைலோன், ரெறிலின் துணிகளின் தூய சலவைக்கும் -- அலுமினியப் பாத்திர வகைகளை சுத்தம் செய்வதற்கும் விசேஷ இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன,

10 மில்க்வைற் பார் சோப் உறைகளுக்கு:- ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

**மில்க்வைற் மெடிகேட்டட் சோப்:**

சகலவித சரும வியாதிகளுக்கும் மக்கள் தினமும் பாவிக்கும் வாசனை சோப்

10 மில்க்வைற் மெடிகேட்டட் சோப் உறைகளுக்கு:-
ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

**மில்க்வைற் சலவைப் பவுடர்:**

பொங்கிவரும் நுரைவளம் துணிகளின் அழுக்கை மின் வேகத்தில் அகற்றித் தூய வெண்மை அளிப்பது

10 மில்க்வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு:-
ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)

மேற்காட்டியவாறு மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் தொழிற்சாலை காரியாலயத்தில் 30-6-1969 வரை கொடுத்து இலவசப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

தந்தி: 'மில்க்வைற்'' தொலைபேசி: 7233

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

527, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

கிளை: மில்க்வைற் டிப்போ, 53, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு—13.


தலைநகரில் அறிவிக்கப்பட்டது.

பெடரல் நைஜீரியத் துருப்புகளுடன் சேர்ந்து பியாப்ராவுக்கு எதிராக இவர்கள் சண்டையில் இறங்கியதாகப் பிடிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்களில் இத்தாலிக்காரர்களே பெரும்பாலானவர்கள்.

இத்தாலியின் சார்பில் போர்த்துக்கல் பியாப்ராவுடன் தொடர்புகொண்டிருந்தது. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு அளிக்க கேணல் ஒஜுக்கு இணங்கியிருப்பதாக இப்பொழுது போர்த்துக்கல் வெளிநாட்டு அமைச்சு அதிகாரியொருவர் கூறினர்.

### மணிலா சென்றுர்

உடுவில், வியாழன்

அம்பாறை விவசாய பாடசாலை போதனுசிரியர் திரு. கந்தையா வரதராஜன் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலாவில் நெற்பயிர்ச் செய்கை ஆராய்ச்சிப் படிப்பிற்கென சென்ற வாரம் இலங்கையிலிருந்து மணிலா சென்றுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த திரு. கந்தையா வரதராஜன் இலங்கை அரசாங்க உபகாரச் சம்பள உதவியில் ஆறுமாத காலம் மணிலாவில் தங்கியிருந்து நெல் விளைவை அதிகரிக்கும் ஆராய்ச்சி மூறைகளில் பயிற்சி பெறுவர்.

### பெருநாள்

புத்தூர், வியா.

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் பெருநாள் ஒன்பது நாட்கள்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மாலைப் பூசையும் ஞான ஒடுக்கப் பிரசங்கங்களும்நடந்தேறின

திருநாளன்று காலை இருநாட் பூசை வண சற் என் குருஸ் சுவாமிகளாற் பாடப்பட்டது. திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் பெருநாள் நிறைவேறியது.

இங்கு தமது காணிக்கைகளைச் செலுத்தவருபவர்கள் சோழிகளைக் காணிக்கையாகக் கொண்டு வரவேண்டாமென அறிவிக்கப் பட்டுள்ளது.

### திரிதின ஆராதனைகள்

பண்டத்தரிப்பு, வியா.

சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் திருநாளுக்கான திரிதின ஆராதனைகள் நடைபெறுகின்றன. சனிக்கிழமை திருநாட் பூஜையுடனும் சுற்றுப் பிரகாரத்துடனும் திருநாள் முடிவடையும்.

விழா கொண்டாடப்பட்டது.

0 0 0

கோப்பாய், வியாழன்

'மனிதன் மனிதனுக வாழ முற்படுவதே வாழ்க்கையின் உயர்ந்த நெறியாகும்' வள்ளுவப் பெருந்தகையின் அடிப்படைச் சிந்தனைகளை ஒருவன் வாழ்வில் மேற்கொள்வானுயின் அவன் வாழ்வு சிறந்ததாக அமைய முடியும்.'

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தார் ஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள், வள்ளுவர்விழா கொண்டாடினர். கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வலி - கிழக்கு காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது.

'ஞானம்பெற்ற ஞானசம்பந்தன்' என்பதுபற்றி சிவ. வை. நித்தியானந்த சர்மா சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்திஞர்.

0 0 0

உடுவில், வியாழன்

இந்துமாணவர் சங்க ஆதரவில் மானிப்பாய் மேமோரியல் பாடசாலை மாணவர்கள் திருஞான சம்பந்தர் குருபூசையை அங்குள்ள நடேசர் ஆலயத்தில் கொண்டாடினர்.

பாடசாலை பிரதம பகுதிஅதிபர் திரு. எஸ். எஸ். ஐயர் பாடசாலை அதிபர் திரு.வி. ஜி. சம்பந்தன் ஆகியோர் சம்பந்தரின் வழிமுறைகளை எடுத்துக் கூறினர். ஆசிரியர் திரு. எஸ். சின்னத்துரை நன்றி கூறிஞர்.

0 0 0

அளவெட்டி, வியா

கொக்குவில் பொற்பதி இந்து இளைஞர் சங்கம் சம்பந்தர் குருபூசையை வெகு விமரிசையாக கொண்டாடியது.

இச் சங்க ஆதரவில் நிகழ்ந்த சம்பந்தர் குருபூசை விழாவில் அமெரிக்காவிலிருந்து கொழும்பு திட்டத்தின் கீழ் இலங்கை வந்துள்ள திரு. டனிங் என்பவரின் முகவீணைக் கச்சேரியும் திரு. ஆர். சிவப்பிரகாசத்தின் சிறப்புச் சொற்பொழிவும் அரு கோஷ்டியினரின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெற்றன.

### வெள்ளிவிழா

பண்டத்தரிப்பு, வியா.

சில்லாலை கதிரை மாதா ஆலயத்தைச் சேர்ந்த மாநகர சபையினர் 24வது தமது சபையின் வெள்ளி விழாவை சென்ற 3-ம் திகதி கொண்டாடின: இதனையிட்டு நன்றியறிந்த பாடற் பூசை நடத்தப்பட்டது.


ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

பெயர் : ...................................

விலாசம் : ...................................

...................................


# என் டேவிட் பிரவுண் ட்ராக்டர்கள்?



தினமும் அதிகமதிகமான கமக்காரர்களும், விவசாயிகளும் டேவிட் பிரவுண் ட்ராக்டரை உபயோகிக்க ஆரம்பிக்கின்றார்கள்.

காரணம் எங்கள்

## உத்தரவாதம்

டேவிட் பிரவுண் அசல் மாற்றுறுப்புகள் எந்த வேளையிலும் கிடைக்குமென்பதற்கு

## உத்தரவாதம்

இலங்கையெங்குமுள்ள எங்கள் விநியோகஸ்தர்கள் மூலம் விற்பனைக்குப் பின் சிறந்த சேவையைப் பெறுவதற்கு

## உத்தரவாதம்

உங்கள் விவசாயப் பிரச்சினைகளை எங்கள் விற்பன்னர்குழு அக்கறையுடன் கவனிக்குமென்பதற்கு

## உத்தரவாதம்

ட்ராக்டர் சாரதிகள் உழும் நேரத்தில் உற்சாகம் பெறுவார்களென்பதற்கு

ஒவ்வொரு டேவிட் பிரவுண் ட்ராக்டருக்குப் பின்னாலும் திறமை மிக்க தொழில் நுட்பமும், எப்படி என்பதைத் தெரிந்துகொள்ள டேவிட் பிரவுண் ஸ்தாபனத்தாரின் ஒத்துழைப்பும், மற்றும் அரை நூற்றுண்டுக்கு மேல் வியாபாரத்திலும் சேவை முறையிலும் அனுபவமிக்க ரோலன்ஸ் ஸ்தாபனத்தாரின் ஒத்துழைப்பும் ஒருங்கே இணைந்துள்ளது.

DB

HOUSE OF R ROWLANDS

## ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்

(ரோலண்ட்ஸ் நிறுவனத்தின் துணைக்கிளை) டரட் ரோட், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உண்மையான ஜனநாயக உணர்வை வளர்க்க வேண்டுமானுல் சகிப்புத்தன்மை இருநதே ஆகவேண்டும்.

— மகாத்மா காந்தி


ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 24 ந் திகதி (6-6-69)


## கல்விச் சீரமைப்பு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மக்கள் வங்கி மூலம் கடன் வழங்குவதற்கென வருடமொன்றுக்கு முப்பது லட்சம் ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பத்தாயிரம் மாணவர்களுக்கு வருடமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் கடன் வழங்க ஒரு கோடி ரூபாய் வரை தேவைப்படுமென்றும் கல்வி வட்டாரங்களில் கவலையுடன் தெரிவிக்கப்படுகிறது இந்தக் கடன் வழங்கும் பொறுப்பும் கூட தேசிய உயர் கல்விச் சபையிடமிருந்து கல்வி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு கடன் வழங்குவதில் யார் யாருக்கு உதவிபுரியும், யார்யாருக்குச் சிபார்சு செய்யும், யார் யாருடைய சிபார்சில் வரும் மாணவர்களுக்குக் கடன் வழங்க முன்வருமென்பதெல்லாம் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. ஆசிரியர் நியமனம், இட மாற்ற விஷயங்களேஇவற்றுக்குச்சான்று பகரும்.

பல்கலைக்கழகப்படிப்புப் பெறும் மாணவர்களுக்கு உதவிசெய்வதும், இலவசக் கல்வித்திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கே பெருந்தொகைப் பணம் செலவு செய்வதும்இதுவரைசாதித்த பயன் என்ன என்ற கேள்வியையே எழுப்புகிறது.

இந்தியாவில் காந்திமகான் வகுத்த திட்டங்களில் ஒன்று ஆதாரக் கல்வி. ஆதாரக்கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்த அமரர் டாக்டர் ஸாகிர் ஹுசேனும் கூட அந்தத் திட்டம் செயலில் வரும் காலம்தான் உண்மையான இந்தியாவைக் காணமுடியும் என்ற கருத்துப்பட அவர் மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன் வேதனையோடு தெரிவித்திருந்தார் இங்கும் ஆதாரக் கல்வித்திட்டத்தைத் தனிப்பட்ட முறையிலாவது செயல்படுத்தலாமென முனைந்த அமரர் அரியநாயகமும் மற்றும் சிலரும் கூட போதிய உதவியும் ஊக்கமும் ஒத்...

...வும் கூடியதாக நவசீனவின் புதிய கல்வித்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

மாசேதுங்கின் சில, கொள்கைகளோ, போக்குகளோ, சிந்தனைகளோ இந்நாட்டுமக்களில் பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். இந்நாட்டுக்குப் பெரிதும் பொருத்தமற்றவையாகவும் இருக்கலாம். ஆயினும் அவரது புதிய கல்வித் திட்டத்தைநமது கல்வி அமைச்சரும் கல்விமான்களும் அரசாங்கமும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

நவசீனவின் புதியகல்வித் திட்டம் உழைப்பையும் உற்பத்தியையுமே வலியுறுத்துகிறது. இத்திட்டம் எல்லோருக்கும் வேலைவாய்ப்பளிக்க உதவுமென்பதில் ஐயமிருக்காது என்றும் சொல்லலாம். பலாத்கார சிந்தனையையும் இராணுவ மனோபாவத்தையும் விட்டுவிட்டு, உழைப்பையும் உற்பத்தியையும் இணைக்கும் கல்விமுறையை இனியும் நமது நாடு தாமதிப்பது நல்லதல்ல

நமது நாட்டின் இன்றைய கல்விமுறை வெறும் புத்தகப்படிப்பாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிப்பதாகவும், உடலுழைப்பற்ற உல்லாசமும், உத்தியோகமும் தேடுவதாகவும்,சோம்பலை வளர்க்கக்கூடியதாகவும் 'தந்தைக்கோர் ஆயிரம் செலவு' என்ற ரீதியிலும் தான் இருக்கிறது. மாணவர்கள் மத்தியில் விரக்தியும் அதிருப்தியும் ஏற்படவும் கிளர்ச்சிகளும் பெரியோரை மதிக்காத தன்மையும் ஏற்படவும் கல்விமுறைதான் காரணம்.

சீனவில் மாணவர் என்ன செய்கிருர்கள், அங்கு என்ன நடைபெறுகிறது என்ற கேள்விகளைஒதுக்கிவிட்டு, சீனவின் புதிய கல்வித்திட்டத்திலுள்ள பலாத்காரம், ராணுவப்பயிற்சி ஆகியவற்றை நீக்கிவிட்டுநமக்குத்தேவையான உடலுழைப்புக்கும் உற்பத்திக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அம்சங்களை நாங்கள் ஏன் பயன்படுத்தக் கூடாது?

# "ஆறுமுக நாவலர்சபையின் கிளை ஒன்று தமிழகத்திலும் நிறுவப்படல் வேண்டும்

## சிதம்பரம், சென்னை, இராமநாதபுரம், மதுரையிலும் நாவலர் விழா, மாநாடுகள் நடத்துவது அவசியம்'

### கொழும்பில் திரு. சிவகுமாரன் வேண்டுகோள்

கொழும்பு, வியாழன்

"ஆறுமுகநாவலர் விழாவை - மகாநாட்டை இலங்கையில் மட்டும் கொண்டாடுவதோடு நிறுத்திவிடாமல், தமிழகத்திலும் ஆறுமுக நாவலர்சபையின் கிளையொன்றினை நிறுவி, சிதம்பரத்திலும், சென்னையிலும், இராமநாதபுரத்திலும், மதுரையிலும், தமிழகத்தின் பிறஇடங்களிலும் நாவலர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்."

இந்தக் கோரிக்கையை தமிழகத்திலிருந்து மலேஷியா சென்று சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவிட்டு, தாயகம் திரும்பும் வழியில் கொழும்பில் சில நாட்கள் தங்கியிருக்கும் திரு. ச. சிவகுமாரன் இலங்கை ஆறுமுக நாவலர் சபையினரிடம் வெளியிட்டார்.

இவருக்கும், இவருடன் வந்துள்ள இசைப் பேரரசி செல்வி சேலம் ஜெயலட்சுமிக்கும் ஆறுமுகநாவலர் சபையினர்இன்று கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தேநீர்விருந்தொன்று அளித்தனர். அங்குதான் திரு ச. சிவகுமாரன் இந்தவேண்டுகோளை வெளியிட்டார்.

டிசம்பர் மாதங்களில், சென்னையில் நடைபெறும் சங்கீதக் கச்சேரிகளுக்காக வருடா வருடம் ஏராளமான இலங்கையர்கள் வருவதால், "எதிர்வரும் டிசம்பர் மாதத்திலேயே ஆறுமுக நாவலர் விழாவினைத் தமிழகத்தில் கொண்டாட ஏற்பாடு செய்வது நல்லது" என்ற கருத்தையும் திரு. ச. சிவகுமாரன் இந்தக்கூட்டத்தில் கூறினார்.

நீதியரசர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இத்தேநீர் விருந்தில் திரு. ச. சிவகுமாரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஆறுமுகநாவலர் சிலையினை அடிப்படையாக வைத்து, படங்கள் வெளியிடல்வேண்டும். ஒவ்வொரு தமிழ்ச் சைவனின்வீட்டிலும் பூஜை அறையில் நாவலர் பெருமானின் திருவுருவப்படம் இருக்கத்தக்கதாக, எல்லாருக்கும் இலகுவாய்க்கிடைக்கத்தக்க விதத்தில் இப்படங்கள் அச்சிட்டு வெளியிடப்படவேண்டும்.

"ஆறுமுகநாவலரின் பாடல்களை இசைத்தட்டுகளில் பதிவு செய்து உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும். ஆறுமுக நாவலரின் பாடல்களுக்கு ஆங்கில விளக்கக் குறியீடுகளும் கொடுத்து சங்கீத அப்பியாசப் புத்தகங்களாக வெளியிட்டால், தமிழறியா மேல்நாட்டவர்களும், நாவலர்தம் பெருமையினை அறிந்து போற்றவாய்ப்பு ஏற்படும் என்றும் திரு. ச. சிவகுமாரன் கருத்து வெளியிட்டார்.

#### உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம்

இந்தத் தேநீர் விருந்தில் பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், "திருவள்ளுவரைப் போற்றுகின்றவர்கள் கூட, வள்ளுவருக்கும் சைவத்துக்கும் சம்பந்தமில்லை என்று துணிந்து கூற முன்வந்திருக்கும் இவ்வேளையில் சைவ சித்தாந்தக் கருத்துகளுக்கும், வள்ளுவரின் வாய்மொழிக்கும் இடையே உள்ள நெருக்கமான பிணைப்பை தெளிவாகத் தனது சொற்பொழிவுகளிலே, மலேஷியாவிலும், இலங்கையிலும் எடுத்துக் கூறியமைக்காக" திரு. ச. சிவகுமாரனைப் பாராட்டிவிட்டு, "சைவத்தைப் போற்றுவதும், தமிழை வளர்ப்பதும் தமிழகத்துக்கே உரியதென்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் கூட, இன்று நாவலர் பெருமான் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்துள்ள அரிய தொண்டினைத் தெளிந்துணர்ந்து, சைவமும், தமிழும் ஓங்கி வளர,வாழ ஈழநாடும் அதன் பணியைச் செய்துதான் இருக்கிறது என்பதனைத் தெரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இசைப்பேரரசி சேலம் ஜயலக்ஷ்மி, ஆறுமுகநாவலரின் பாடல்களை இசையுடன் பாடினர்.

## "நயினைத்தில் வெளியில் ஸ்ரீ பிடாரி அம்பாள்!

சீரும், சிறப்பும் மிகுந்த நயினாதீவின் தென் மேற்குப் பாகத்தே, காணிகளுக்குத் தோம்புப் பட்டோலைச் சாதனப் பெயர்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாகத் "தில்லைவெளி" என மக்களால் அழைக்கப்பட்டு வரும் பகுதியொன்று இன்னும் இருக்கின்றது. இது சுமார் எழுநூறு ஏக்கர் விஸ்தீரணம் உடையது இந்நிலப் பரப்புக்கள் யாவும் இப்பொழுதும் ஒரு பரந்த சமவெளிப் பிரதேசமாகவே காணப்படுகின்றது.

இலங்கையைப் பறங்கியர் பிடித்த காலத்தில் இந்தப் பரந்த வெளிப் பிரதேசத்...

காட்டி விளக்கஞ்செய்தார். காளி விக்கிரகத்தைப் பார்வையிட்ட மக்களனைவரும் அது ஒரு "துர்க்கை" யின் வடிவமுடையதென நிச்சயித்து அதற்குச் "ஸ்ரீபிடாரி அம்பாள்" எனப் பெயரிட்டு அன்று தொட்டு இன்றுவரையும் "ஸ்ரீ பிடாரி அம்பாள்" என்றே அழைத்துவருகிருர்கள்.

அந்த விக்கிரகம் பார்வைக்குச் சிங்கத்தின் முகமும், காளிதேவியின் மகா உக்கிரத் தோற்றமும் பொருந்தியதாகவும், மரத்தில் செய்யப்பட்ட உருவமாகவும் காணப்படுகின்றது. சிதம்பரத்திலுள்ள "தல விருக்ஷமாகிய தில்லை மரத்...

### இன்றைய பலன்

6-6-69

வைகாசி மாதம்

24-ம் திகதி

### மகாநாடு

திருக்கோணமலை மாவட்டத்தின் பட்டின சபை, கிராமசபைத் தலைவர்களின் மகாநாடொன்று சென்ற 1-ந் திகதி இங்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இம்மகாநாட்டிற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. வாமதேவன் தலைமைதாங்கினர்.

(8ம் கலத் தொடர்ச்சி)

மூன்று மாதத்திலிருந்து ஐந்துவருடம் வரையிலான கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்றும் அந்தச்செய்தி கூறுகிறது.

தமிழ்த்துவேஷ சுலோகங்கள் எழுதுவோர், தமிழ் எழுத்து அழிப்போர் என்பவர்கள் மீது கவனம் செலுத்தினல் மட்டும் போதாது.

துவேஷத்தைத் தூண்டிவிடும் முறையில் பேசுவோர், எழுதுவோர், அவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிசாருக்கு எப்போது துணிச்சல் வருமோ?

— ஊர்சுற்றி.

# நாடும் நடப்பும்

'ஈழநாடு' பத்திரிகையின் வளர்ச்சி மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. நேர்மையும் அதாவது பத்திரிகை தர்மம் இலங்கை முழுவதற்குமான ஒரே பத்திரிகை என்ற நோக்கும் 'ஈழநாடு' பத்திரிகையில் காணமுடிகின்றதால், 'ஈழநாட்டை' வாழ்த்தவும் பெருமைப்படவும் முடிகின்றது. வரும் ஆண்டினில் 'ஈழநாடு' தனக்கே உரித்தான தனி நடையுடன் வளர முருகனைப் பிரார்த்திக்கிறேன்".

லண்டனிலிருந்து திரு வள்ளிகாந்தன் என்னும் அன்பர் இப்படி எழுதியிருக்கிருர். 1967-ம் ஆண்டிலிருந்து சந்தா செலுத்தி விமானத்தபால் மூலம் 'ஈழநாடு' பத்திரிகையைப் பெற்றுவருபவர் இந்த அன்பர். இந்த ஆண்டிற்குரிய சந்தாப்பணத்துடன் இப்படி வாழ்த்துச் செய்தியையும் அனுப்பியிருக்கிருர். மலாயா, சிங்கப்பூர், புருனி ஆகிய, கடல்கடந்த நாடுகளிலும் 'ஈழநாடு' அன்பர்கள் இருந்து எமக்கு அடிக்கடி வாழ்த்தும் பாராட்டும் தெரிவிப்பது எமக்கு மேலும் மேலும் உற்சாகம் தருகிறது. வாழ்க இந்த அன்பர்கள்.

நம் நாட்டிலேயே இங்கிலீசு படித்துவிட்டால் தமிழ்ப்பத்திரிகை படிப்பதே பாவம் என்றும் பரிகாசத்துக்குரியது என்றும் நினைப்பவர்கள் பலர் இருக்கிருர்கள். பத்திரிகையில் வெளிவந்த செய்தியைப் படிக்காமலே, அதைப்பற்றி விமரிசனம் செய்பவர்களும் "ஏன்அப்படிச் செய்தியைப் போட்டீர்கள்?" என்று கேட்கும் பேர்வழிகளும் இங்குள்ளார்கள். லண்டனுக்குப் புறப்பட்டவுடனேயே தமிழை மறந்து இங்கிலீஸ்காரர்களாக மாறிவிடும் நம்மவர்களும் இல்லாமலில்லை..

ஆனல் அன்பர் வள்ளிகாந்தன் இதற்கு விதிவிலக்கு. அவர் அனுப்பிய விமானத் தபாலில் 'அதிபர் அவர்கள்'' என்று அழகாகத் தமிழில் எழுதி மிகுதி விலாசத்தைஅதுலண்டனிலிருந்து இங்குவந்து சேரவேண்டுமேயென்பதற்காக ஆங்கிலத்தில் எழுதியிருக்கிருர்.

0 0 0

இங்குள்ள அன்பர்களும் கடல் கடந்து வாழும் அன்பர்களும் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இச் சமயத்தில் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்து வருகிருர்கள்.

வெள்ளவத்தையில் 'ஈழநாடு' வாசகர் சங்கம் ஒன்றை தாங்கள் நிறுவியிருப்பதாக க. பேரம்பலம் என்ற அன்பர் எழுதுகிருர். இவர்களுக்கெல்லாம் எங்கள் நன்றி.

0 0 0

தென்னிலங்கையிலும் மலையகப் பகுதிகளிலும் தமிழ்த் துவேஷப் பிரசாரமும் தமிழர் எதிர்ப்புச் சுலோகங்களும் தலைதூக்கியிருப்பதாகவும் இந்த விஷமத்தனமான செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது பொலிசார் கவனத்தைத் திருப்பியிருப்பதுடன் அவர்கள் மீது இப்போதுள்ள குற்றப்பிரிவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க பொலிஸ் அதிபர் உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இப்போதுள்ள குற்றப் பிரிவுச்சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குத்தொடர்ந்து அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால்

(6-ம் கலம் பார்க்க)


இப்பொழுது நீங்கள்

நாகம்பூசிய

கெம்புத்தகரங்களை

...ம்.....

குறைந்த செலவில்

...ரையிடுவதற்கும்

...கும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கும் சில மாதங்களுக்கு முன் வேதனையோடு தெரிவித்திருந்தார் இங்கும் ஆதாரக் கல்வித்திட்டத்தைத் தனிப்பட்ட முறையிலாவது செயல்படுத்தலாமென முனைந்த அமரர் அரியநாயகமும் மற்றும் சிலரும் கூட போதிய உதவியும் ஊக்கமும் ஒத்துழைப்பும் இல்லாத காரணத்தால் வெற்றியீட்ட முடியாது போயிற்று.

நமது நாட்டுக்கேற்ற கல்வி முறையை உருவாக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டு உலகயாத்திரைசெய்து திரும்பிய நமது கல்வி அமைச்சர் இதுவரை சாதித்தது மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொதுமக்களில் ஒரு பிரிவினர் ஆகியோரின் வெறுப்பையும் கசப்பையும் தேடிக்கொண்டதுதானே யொழிய வேறொன்றும் உருப்படியான காரியமல்ல.

நவசீனவைப் பற்றியும் அதன் தலைவர் மா-சே-துங் பற்றியும் உலகின் பல நாடுகளிலும் இலங்கையிலும் கூட என்னதான் கருத்துக் கொண்டிருந்தாலும், 'சோஷலிஸக் கல்வித்திட்டம்' என்ற பெயரில் சமீபத்தில் 'பீப்பிள்ஸ் டெய்லி' என்ற நவசீனப் பத்திரிகையில் வெளிவந்த கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் நமது கல்வி அமைச்சரினதும் அரசாங்கத்தினதும் கல்விமான்களினதும் கவனத்தைப் பெரிதும் ஈர்க்க வேண்டியன.

(1) விவசாயத்தையும், விவசாய உற்பத்தியையும் மையமாகக்கொண்ட கல்வியாகவும். (2) புத்தகங்களை மாத்திரம் நம்பியிராத கல்வியாகவும், (3) புத்தகத்தைச்சுற்றி வட்டமிடும் பரீட்சைகள் எதுவுமிராத கல்வியாகவும், (4) உடற்பயிற்சிக் கல்வி உற்பத்தியோடுகூடிய உழைப்பாக இருக்கும் கல்வியாகவும், (5) விவசாயத்தின் அடிப்படை அறிவை அளிப்பதாக அமைந்துள்ள கல்வியாகவும், (6) இப்பாடசாலைகள் யாவும் கிராமப்புறங்களில் நிறுவப்படுவதாகவும், (7) விவசாய காலத்தில் 35 நாட்கள் பாடசாலைகளுக்கு விடுமுறையளிப்பதாகவும் இந் நாட்களில் மாணவர்கள் வயல்களில் வேலை செய்யக் கூடியதாகவும், (8) குளிர் கால, கோடைகால விடுமுறைகள் மாணவர்கள் விவசாய உற்பத்தியில் ஈடுபடக் கூடியதாகவும் விடுமுறையைச் சோம்பலுக்குரியதாக இராமலும் (9) அரசியல் அறிவுமொழி மற்றும் விஞ்ஞானம், கணக்கு முதலியவற்றோடு புரட்சி இலக்கியமும் இராணுவப் பயிற்சியும் பெற விகளைஒதுக்கிவிட்டு, சீனவின் புதிய கல்வித்திட்டத்திலுள்ள பலாத்காரம், ராணுவப்பயிற்சி ஆகியவற்றை நீக்கிவிட்டுநமக்குத்தேவையான உடலுழைப்புக்கும் உற்பத்திக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அம்சங்களை நாங்கள் ஏன் பயன் படுத்தக் கூடாது?

## தாய் மொழியே..

*(1-ம் பக்கத் தொடர்ச்சி)*

சாலைகளில் இடநெருக்கடி ஏற்படுகிறது.

'கடமை உணர்ச்சியும் பண்பும் நிறைந்த ஆசிரியர்கள் எங்கு இருக்கின்றார்களோ அங்கேதான் நம் பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெற முடியும்.'

விழாவுக்கு வட்டுக்கோட்டை வட்டார வித்தியாதிகாரி திரு. பி எஸ். குமாரசாமி தலைமை தாங்கினர். தலைவர் தமது தலைமையுரையில் முருகமூர்த்தி வித்தியாசாலை சிறந்த கனிஷ்ட வித்தியாசாலைகளிலொன்றென்பதை தாம் புள்ளிவிபரங்கள் மூலம் எடுத்துக் கூற முடியும் எனத் தெரிவித்தார். ஆங்கிலப் பாடத்திலும் இப்பாடசாலை மாணவர்கள் தரமனவர்களாகக் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். ......

## சென் அன்ர...

*(2-ம் பக்கத் தொடர்ச்சி)*

முற்பட்டதால் அடுத்தடுத்து இருகோல்களை இக் கோஷ்டியின் வீரர்களான கிறேஸியன், சாந்தி ஆகியோர் மிக அழகாகப் போட்டனர். இதன் பின் 'யுத்கவுன்சில்' கோஷ்டியின் முன்னணி வீரர் அன்ரனும் தமது கோஷ்டியின்சார்பில் 2-வது கோலைப்போட்டார். ஆட்டம் முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் மேலும் கோல்கள் எதுவும் போடாததால், மத்தியஸ்தர் மேலும் 10 நிமிடங்கள் போட்டியை நீடித்தார். இதிலும் இரு கோஷ்டிகளும் கோல்கள் போடாததால், மத்தியஸ்தர் ஆட்டமுடிவில் நாணயத்தை சுண்டியதால், அதிர்ஷ்டம் யுத்கவுன்சில் பக்கமே தலைகாட்டியது. இப்போட்டிக்குதிரு.ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### கிறுஸ்கொப்பர்ஸ் வெற்றி

வதிரி 'டையமன்ட்ஸ்' விளையாட்டுக்கழகத்திற்கும், தெல்லிப்பளை 'கிறுஸ்கொப்பர்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த போட்டியில், வதிரி டையமன்ட்ஸ் கோஷ்டி மைதானத்துக்கு வராததால், மத்தியஸ்தர் திரு. எம். டி. தம்பிராசா, கிறுஸ் கோப்பர்ஸ் கோஷ்டிக்கு வெற்றிஎனத் தீர்ப்பளித்தார். (தே. நி.)

## பலன்

6-6-69

வைகாசி மாதம்

24-ம் திகதி

வெள்ளிக்கிழமை

திதி- சப்தமி இரவு 3-34 மேல் அட்டமி.

நட்சத்திரம்- அவிட்டம் பகல் 10-31 மேல் சதயம்.

ராகுகாலம்- 12-22 — 11-52.

சுபநேரம்- 5-52 — 7-22.

---

இன்று பிறந்தவர்களுக்கு - கலையார்வமும், காதலில் ஈடுபாடும் ஏற்படுவதற்கு இடமுண்டு. சிலருக்குத் தொழில் விடயத்திலும் முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது. குடும்பத்தில் அமைதி நிலவும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தவும், உணர்ச்சி வழிப்போராட்டங்களுக்கு இடம்கொடாதிருக்கவும்.

---

மேஷம்- குடும்பசுகக் குறைவு, பிரிவுத் துயர்.

ரிஷிபம்- கல்வி நலன், அறிஞர்கள் ஆதரவு.

மிதுனம்- இதயப்பூரிப்பு இன்பத்தின் சாயல்.

கடகம்- அன்னியவாசம் அகாலபோசனம்.

சிம்மம்- தென்றல்வீசும் தேன்சொட்டும் வாழ்வு.

கன்னி- சிநேகிதர்பகை, சிந்தையில் குழப்பம்.

துலாம்- புண்ணிய விருப்பு பொதுத்துறை நாட்டம்.

விருச்சிகம்- செல்வாக்குப் பெருகும், சிறப்பான வாழ்வு.

தனுசு- வரவில் உயர்வு, வாழ்த்துமுண்டு.

மகரம்- தொழில்கவலை தொல்லைகள் பெருகும்.

கும்பம்- அலைமோதும் மனம், அற்ப இலாபம்.

மீனம்- தனச்சிறப்பு, தானியவிருத்தி.

— சோதிடக்கலாநிதி —

**திருமலை வேலுப்பிள்ளை**

னும் இருக்கின்றது. இது சுமார் எழுநூறு ஏக்கர் விஸ்தீரணம் உடையது இந் நிலப் பரப்புக்கள் யாவும் இப்பொழுதும் ஒரு பரந்த சமவெளிப் பிரதேசமாகவே காணப்படுகின்றது.

இலங்கையைப் பறங்கியர் பிடித்த காலத்தில் இந்தப் பரந்த வெளிப் பிரதேசத்தில் மக்கள் ''சேனைப் பயிர்கள்'' செய்து பெரும் பிரயோசனத்தைப் பெற்றுவந்தனர். இதனுடைய மேற்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் பாம்பன்தொடுவாய்ச் சமுத்திரக் கரையாகும். பார்வைக்குக் ''கன்னியா குமரி''யைப்போல் காட்சிதரும் ஓர் அற்புதப் பூமி! சோழகக் காற்றெனப்படும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் இப்பகுதியில் தீராத ''நோயாளிகள்'' பலர் வந்து தங்கி, இங்குள்ள நீரோடைகளில் குளித்து நோய் நீங்கப்பெற்றுச் செல்கின்றார்கள்.

ஈழநாட்டுப் புலவர்களுக்குள் தலைசிறந்தவரான கவிமணி ''நாகமணிப் புலவர்'' தமது பன்னிரண்டாவது வயதில் ஸ்ரீ பிடாரி அம்பாளின் திருவருட்கடாட்சம் பெற்று ''புலவர்சிகாமணி''யாகத் திகழ்ந்ததும் இத் தில்லைவெளியிலேதான். இத்தகைய அற்புத மகத்துவத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் தெய்வமாகிய காளிதேவியை மக்கள் ''ஸ்ரீ பிடாரி அம்பாள்'' என அழைப்பர்.

ஏறக்குறைய 470 ஆண்டுகளுக்கு முன்னர் ''கொள்ளி சேதான்'' என்பவரின் அருமைத் திருமனைவிக்கு ''வாதம்'' என்னும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு அதனல் கஷ்டப்பட்ட பொழுது வைத்திய நிபுணர்கள் அவரைக் ''கடல்நீரில்'' தினந்தோறும் குளித்துவருமாறு கட்டளையிட்டனர். அவரும் அக்கட்டளைக்கிணங்கித் தினந்தோறுங் காலையில் சென்று அருகாமையில் உள்ள கடலில் நீராடிவருவது வழக்கமாயிற்று.

ஒரு நாள் அவர் வழமை போலக் கடலிற் குளித்துக் கொண்டு நிற்கும்பொழுது சமுத்திரத்திலிருந்து கரையை நோக்கி மிதந்து கொண்டிருக்கும் ஒரு விக்கிரகத்தைக் கண்டார். இவர் அவ்விக்கிரகத்திற்குச் சமீபமாகச் சென்று, அதனைத் தமது இரு கரங்களாலும் தூக்கி எடுத்துப் பார்க்கும்பொழுது தமக்கு ஏற்பட்டுள்ள ''வாத நோய்'' நீங்கக் காணப்பட்டார்.

தமக்கு ஏற்பட்டிருந்த கொடிய ''வாத நோய்'' நீங்கிய அதிசயத்தையும், அதற்குக் காரணமாகத் தாம் எடுத்துள்ள அந்தக் ''காளி'' விக்கிரகத்தையும் மக்கள் எல்லோருக்கும் காட்டினார்கள்.

அந்த விக்கிரகம் பார்வைக்குச் சிங்கத்தின் முகமும், காளிதேவியின் மகா உக்கிரத் தோற்றமும் பொருந்தியதாகவும், மரத்தில் செய்யப்பட்ட உருவமாகவும் காணப்படுகின்றது. சிதம்பரத்திலுள்ள ''தல விருக்ஷமாகிய தில்லை மரத்தில்'' செய்யப்பட்டதெனவும், அங்குள்ள ஸ்ரீ காளிதேவிக்குப் பதிலாக ''ஆவாகனம்'' செய்யப்பட்டுள்ள ஸ்ரீ காளி விக்கிரகமெனவும் அங்கிருந்து இங்கு வந்துபோன ''சிவ முனிவர்'' ஒருவர் கூறியுள்ளார்.

இச்சிறப்பமைந்த தெய்வக் காளி விக்கிரகத்தை, அது மிதந்து வந்த சமுத்திரக் கரையின் பக்கத்திலேயே ஒரு சிறிய கோவில் கட்டி, அக்கோவிலில் ''ஸ்ரீ பிடாரி அம்பாள்'' விக்கிரகத்தைப் பிரதிஷ்டைசெய்து இப்பொழுது அவ்வாலயம் ''ஸ்ரீ பிடாரி அம்பாள்'' கோவிலென யாவராலும் போற்றிப் புகழப்பட்டு வருகின்றது. திருவருளும் அற்புதமும் நிறைந்த தெய்வ சக்தியாக ''ஸ்ரீ பிடாரிஅம்பாள்'' விளங்குகின்றார்.. இந்தக் ''காளி அம்பிகை''யினது அதி அற்புத மகிமைகளை இவ்வளவினதென்று யாவராலும் குறிப்பிட்டுக் கூற முடியாது.

''நம்பினர்க்கு நலம் பல நல்கும் ஸ்ரீ பிடாரி அம்பாளுக்கு'' வருஷாவருஷம் வைகாசி மாதத்துப் பூரணையில் ''பூரண மகாகும்பம்'' வைத்து அதனையடுத்து எட்டு நாட்களுக்கு விசேஷ அபிஷேகங்களும், அலங்கார விழாக்களும் செய்யப்பெற்று ஒன்பதாவது நாளன்று ஒரு ''மகாவேள்வி''யும் செய்யப்படும். யாகம் வளர்த்தல், அபிஷேகம் செய்தல், பொங்கல் செய்தல், பல வகைப் பலகாரப் பட்சணங்கள் படைத்தல், இனிய பலவகைப் பழங்கள் மிகுதியாகப் படைத்தல், தாம்பூலவகை இவையாதியன சேர்ந்து இம்மகாவேள்வியிலடங்கும். இம்மகாவேள்வியானது 'கவிஞன் பாரதியார்'' கூறிய ''புண்ணிய வேள்வி''யாகக் காட்சியளிக்கும். இம்மகாவேள்வி நடைபெறும் இத்திருநாளில் வெளியூர்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான அன்புடைய தொண்டர்கள், அபிமானிகள் வந்து ''மகா வேள்வி''யைச் சிறப்பிப்பார்கள். மக்கள் எல்லோரும் ''ஸ்ரீ பிடாரி அம்பாளை''த் தரிசித்தவுடன் தன்வயமிழந்து, மெய்மறந்து, ஆனந்தவயத்தராய்த் தொழுத கையொடு நின்று வழிபடும் காட்சி கசிந்துருகச் செய்துவிடும்.

—நயினை சி.க.பொன்னையா


நீங்கள் நாகம் பூசிய இரும்புத்தகரங்களைப் பாவிக்கலாம்.....

குறைந்த செலவில் கூரையிடுவதற்கும் மூடுவதற்கும்.



**றிவர் பிராண்ட்**

நாகம் பூசிய தகரங்கள்

குறைந்த செலவில் கூரையிடுவதற்கும், மூடுவதற்கும் நாகம் பூசிய தகரங்களையே நாடுங்கள்.

ஆற்றுக்குறியுடைய, நெளிவுள்ள நாகம் பூசிய தகரங்கள், விரும்பத்தக்க மானிகளில் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன. பிரபல்யமான எல்லா இரும்புக் கடைகளிலும் இத்தகரங்களை உடனே பெற்றுக்கொள்ளலாம்.

24, 26, 28 மானியுள்ளவை

பல்வேறு பாவனைகளுக்குப் பயன் படுத்தப்படுகின்றன. இவை குறிப்பாக தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகட்கும், உணவுக்களஞ்சியங்கட்கும், பண்டகசாலைகட்கும், கிடங்குகட்கும் உகந்ததாகும்.

24, 26, 28 மானியுள்ளவை

கோழி வளர்ப்பவர்கட்கும், சிறிய கைத தொழிலுக்கும், விவசாயிகளுக்கும், ஏனையோருக்கும் உகந்ததாகும்.

கூடிய நன்மைகள் ஐந்து. சிக்கனமானது. நீண்டகாலம் பாவிக்கக் கூடியது. இலகுவாக நிறுவக் கூடியது. தீ பிடித்தலையும், கால நிலைச் சேதத்தையும் தடுக்க வல்லது. குறைந்த செலவில் தாபரிக்கக் கூடியது.

தயாரிப்பாளர்:

**றிவர் பிராண்ட்**

**இலங்கை கல்வனைசிங் இன்டஸ்ரீஸ் லிமிட்.**

தொழிற்சாலை. லேடி கத்தரின் தோட்ட வீதி, இரத்மலானை. தொலைபேசி. (71) 7987

கொழும்பு அலுவலகம்; 450, பழைய சோனக தெரு. கொழும்பு 12. தொலைபேசி: 33143

G14-69-MASTER



இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org